

# பாடம் 12

டிசம்பர் 15 – 21

# சபை அமைப்பும் ஒற்றுமையும்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *எபே 5:23-27; மத் 20:25-28; தீத்து 1:9; மத் 16:19; கலா 6:1,2; மத் 28:18-20.*

**மனன வசனம்:** உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். மத்தேயு 20:26,27.

இயேசு மனுகுலத்திற்காக நிறைவேற்றியிருப்பதை விசுவாசிப்பதால் மட்டுமே இரட்சிப்பு என்று நம்புகிற புரொட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள்தாம் செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகள். கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றின் புண்ணியங்களைப் பெற்றுக்கொள்ள நமக்கு ஒரு சபையோ, சபைநிர்வாகமோ தேவையில்லை. கிறிஸ்து நம் பதிலாளியாக சிலுவையில் மரித்திருக்கிறார்; பரலோக பரிசுத்த ஸ்தலத்தில் நம் பிரதான ஆசாரியராக மத்தியஸ்த ஊழியம் செய்துகொண்டிருக்கிறார்; எனவே அதன் புண்ணியங்களை நேரடியாக கிறிஸ்துவிடமிருந்தே பெறலாம்.

ஆனால், சபையை உண்டாக்கியவர் தேவன்; நமக்காகத்தான் அதை இங்கு வைத்திருக்கிறார். இரட்சிப்பு பெறுவதற்காக அல்ல, இரட்சிப்பை உலகிற்குக் கொடுப்பதற்காக வைத்திருக்கிறார். உலகிற்கு நற்செய்தியை அறிவிப்பதற்கு தேவன் உருவாக்கியிருக்கும் அமைப்புதான் சபை. சபை அமைப்பு இல்லாவிட்டால், மற்றவர்களுடன் பயன்மிக்கவிதத்தில் இயேசுவின் இரட்சிப்பின் செய்தியை பகிரமுடியாது.

ஊழியப்பணியைச் செய்ய சபை அமைப்பு ஏன் முக்கியமாக இருக்கிறது? அது எவ்வாறு சபை ஒற்றுமையைப் பேணிவளர்க்கிறது? இந்த வாரம் ஆராய்வோம்.

*2018, டிசம்பர் 22 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*



# சபையின் தலையாகிய கிறிஸ்து

சபையைக் கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறது வேதாகமம். இந்த உருவகம் சபையின் பல்வேறு அம்சங்களையும், கிறிஸ்துவுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையேயுள்ள உறவையும் சுட்டிக்காட்டுகிறது. கிறிஸ்துவின் சரீரமாக சபை இருப்பதால், எல்லாவற்றிற்கும் தலையாகிய அவரையே அது சார்ந்திருக்கிறது. கொலோ 1:18; எபே 1:23. சபைக்கு ஆதாரம். அவரில்லாமல் சபை இல்லை.

சபையின் அடையாளம் கிறிஸ்துவில்தான் இருக்கிறது; ஏனென்றால், சபையின் போதனைகளுக்கு அவரே ஆதாரமும் அடித்தளமும் தொடக்கமுமாக இருக்கிறார். ஒரு குழுவில் கிறிஸ்து இருக்கிறாரா? வேதாகமம் வெளிப்படுத்துகிற அவருடைய வார்த்தை இருக்கிறதா? இவைதாம் அக்குழு தேவனுடைய சபையா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கிறது?

**கேள்வி: கணவன்-மனைவிக்கிடையில் எப்படிப்பட்ட உறவு காணப்படவேண்டும்? இதை எடுத்துக்காட்ட, கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையேயுள்ள உறவை பவுல் பயன்படுத்துகிறார். எபே 5:23-27. இதுபற்றி அவர் கூறும் முக்கியக் கருத்துகள் என்ன?**

கடந்தகாலங்களில் சபைத்தலைவர்கள் தங்கள் அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்; எனவே அதற்குக் கீழ்ப்பட்டிருப்பதற்கு நாம் தயங்கலாம். ஆனால் தலைவரான கிறிஸ்துவுக்கும் அவருடைய அதிகாரத்திற்கும் கீழ்ப்பட்டதுதான் சபை. கிறிஸ்துவைத் தலையாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நம் தொழுகை ஆண்டவராகிய அவருக்கு மட்டுமே உரியது என்பதை இதுதான் வெளிப்படுத்துகிறது. சபைக்கு அமைப்பு தேவை. ஆனால் அது எப்போதும் நம் சபையின் தலையாகிய இயேசுவின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டும்.

‘கிறிஸ்துவை அடித்தளமாகக் கொண்டு கட்டப்பட்டிருப்பது சபை; அவரே தலையென்று கீழ்ப்படியவேண்டும். அது மனிதனையோ, மனிதனின் கட்டுப்பாட்டையோ சார்ந்திருக்கக்கூடாது. ஒருவர் சபையில் பொறுப்பான பதவி வகித்தால், ‘மற்றவர்கள் என்ன நம்பவேண்டும்? என்ன செய்யவேண்டும்?’ என்று கட்டளையிடுவதற்கான அதிகாரம் அவருக்கு இருப்பதாக சிலர் நினைக்கிறார்கள். இதை தேவன் அங்கீகரிப்பதில்லை. ‘நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்’ என்று இரட்சகர் கூறுகிறார். எல்லாருக்கும் சோதனை வரும்; தவறுசெய்கிற வாய்ப்பு எல்லோருக்கும் இருக்கிறது. அநித்தியமான எந்த மனிதனையும் வழிகாட்டியாக சார்ந்திருக்கமுடியாது. சபையில் கிறிஸ்துவின் ஜீவப்பிரசன்னம்தான் விசுவாசத்தின் கன்மலை. மிகவும் பெலவீனன் கூட அதைச் சார்ந்திருக்கலாம்; தங்களைப் பெலவான்களாகக் கருதுகிறவர்கள் கிறிஸ்துவை தங்கள் துருகமாக்காவிட்டால், பெலவீனர்களாகக் காணப்படுவார்கள்.’ - *EGW, DA, p 414.*

‘அநித்தியமானவர்களைச்’ சார்ந்திருப்பது எளிதாக இருக்கிறது; ஆனால், கிறிஸ்துவைச் சார்ந்திருக்கப் பழகுவதற்கு நாம் என்ன செய்யலாம்?

**திங்கள்** டிசம்பர் 17



# வேலையாள் தலைமைத்துவம்

தங்களுக்கு அதிகாரம் இருப்பதுபோல சீடர்கள் ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொண்டார்கள்; தம் ஊழியக்காலத்தில் இயேசுவுக்கு இது பெரும் வேதனையைத் தந்தது. இயேசுவின் ராஜ்யத்தில் அதிகாரமிக்க தலைவர்களாக வேண்டும் என்கிற ஆசை அப்போஸ்தலர்களுக்கும் இருந்திருக்கிறது. மாற்கு 9:33,34; லூக்கா 9:46. கடைசி இராப்போஜனத்திலும்கூட பதவியாசை, அதிகாரம் குறித்த எண்ணங்கள் அவர்களில் மேலோங்கியிருந்தது. லூக்கா 22:24.

**கேள்வி: அப்படிப்பட்ட ஒரு தருணத்தில்தான் ஆவிக்குரிய தலைவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று இயேசு சொல்கிறார். மத் 20:25-28. இயேசு கூறும் அறிவுரையில் காணப்படுகிற தலைமைத்துவ நியதிகள் என்ன? அவற்றை எவ்வாறு நம்முடைய வாழ்க்கையில், குறிப்பாக சபையில் பழக்கப்படுத்தலாம்?**

இந்த வசனங்களில், அதிகாரம் குறித்த இரு மாதிரிகளை இயேசு முன்வைக்கிறார். **முதலாவது,** ரோமர்கள் அதிகாரத்தைப் பார்த்தவிதம். அதன்படி, அதிகாரமுள்ளவர்கள் மற்றவர்களைவிட மேலானவர்கள். தீர்மானம் எடுக்கிற அதிகாரம் அவர்களுக்குண்டு; கீழிருப்பவர்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும். இத்தகைய அதிகாரத்தை இயேசு புறக்கணித்தார்: ‘‘உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது’’ என்று சொன்னார். மாறாக, புதிய மாதிரி ஒன்றை சீடர்களிடம் கூறினார். அவர்கள் அறிந்திருந்த அதிகார மாதிரிக்கு முற்றிலும் வேறுபட்டதாக அது இருந்தது.

அதிகாரம் குறித்து விளக்கமளிக்க இரண்டு வார்த்தைகளை இயேசு பயன்படுத்துகிறார்: ‘ஊழியக்காரன்’ (**டயகோனோஸ்**) மற்றும் ‘அடிமை’ (**டூலாஸ்**). சில மொழிபெயர்ப்புகளில் ‘அடிமைப்பணியாள்’ என்றும் சொல்லப்பட்டுள்ளது. அனைத்துவகையான அதிகார முறைகளையும் ஒழிக்க இயேசு விரும்பவில்லை; ஆனால், சபைத்தலைவர்கள் முதலாவது தேவ மக்களின் ஊழியக்காரர்களாகவும், அடிமைப் பணியாட்களாகவும் இருக்கவேண்டுமென வலியுறுத்த விரும்புகிறார். மற்றவர்கள்மேல் அதிகாரம்செலுத்தவோ, அடக்கியாளவோ, தங்களுக்குப் பேரும் புகழும் உண்டாகச் செய்யவோ பதவி வழங்கப்படவில்லை. ‘‘முற்றிலும் வேறுபட்ட நியதிகளின் அடிப்படையில் இயேசு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினார். பெலவீனர்களின் குறைகளைத் தாங்கும்படியும், அதிகாரம்செலுத்தாமல் ஊழியம்செய்யும்படியும் பெலமுள்ளவர்களிடம் வேண்டினார். அதிகாரம், பதவி, தாலந்து, கல்வி போன்றவற்றைப் பெற்றிருப்பவர்கள் தங்கள் சகமனிதர்களுக்குச் சேவைசெய்யும் மிகப்பெரிய கடமையைப் பெற்றிருக்கிறார்கள்.’ - *EGW, DA, p 550.*

எத்தகைய தலைமைத்துவம் காணப்படவேண்டுமென யோவான் 13:1–20இல் இயேசு தம் சீடர்களிடம் கூறுகிறார். இயேசு போதிக்க விரும்புவது என்ன? சபைக்கு உள்ளேயும், வெளியேயும் நம் செயல்களில் இந்த நியதிகளை நாம் எவ்வாறு வெளிப்படுத்தலாம்?

**செவ்வாய்** **டிசம்பர் 18**



# சபை ஒற்றுமையைப் பாதுகாத்தல்

**கேள்வி: உண்மையுள்ள சபைத்தலைவர் அல்லது மூப்பரின் கடமையாக உள்ள முக்கிய பணிகள் என்ன? 2தீமோ 2:15; தீத்து 1:9.**

போதனைகள் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். ஒற்றுமை உருவாக்க இது முக்கியமானது; ஏனெனில், போதனைகள்தாம் சபையை ஒருங்கிணைக்கிறது. வாழ்வின் பல்வேறு நிலைகள், கலாச்சாரங்கள், பின்னணிகளைச் சேர்ந்தவர்கள் நம் சபையில் உள்ளார்கள். கிறிஸ்து நமக்கு அருளியிருக்கிற சத்தியத்தைப் புரிந்து கொள்வதை வைத்துதான் நாம் ஒன்றுபடுகிறோம். அந்தப் போதனைகளில் நமக்குக் குழப்பங்கள் உண்டானால், பிரிவினைதான் உண்டாகும். நாட்களின் முடிவில், இது மேலும் தீவிரமடையும்.

‘நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்கமனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.’ 2தீமோ 4:1-4.

இயேசுவின் இரண்டாம் வருகையையும் நியாயத்தீர்ப்பு நாளையும் பவுல் வலியுறுத்துகிறார். தேவன் தனக்குக் கொடுத்த அதிகாரத்தின்படி தீமோத்தேயுவுக்கு இந்த முக்கிய ஆலோசனையை வழங்குகிறார். 1தீமோ 1:1. கடைசி நாட்களில், பொய்ப்போதனைகள் பெருகிநிற்கும் நிலையில் தேவவார்த்தையை தீமோத்தேயு போதிக்க வேண்டும்.

தீமோத்தேயு மக்களின் பாவங்களை உணர்த்தி, கடிந்துகொண்டு, புத்திசொல்லவேண்டும். வேதாகமக் கட்டளை ஒன்றை இந்த வார்த்தைகள் நினைவூட்டுகின்றன. 2தீமோ 3:16. தேவவார்த்தையில் நாம் கற்றவற்றைப் பின்பற்றி, போதித்து, நடைமுறையில் காட்டவேண்டும்; அதை நீடியபொறுமையோடு செய்யவேண்டும். கடுமையாகக் கடிந்து கொள்வதால், ஒரு பாவியைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர முடியாது. ஆவியானவர் வழிநடத்துதலின்படி, அடிமைவேலைசெய்கிற தலைவர்களாக பவுலின் வார்த்தைகளைப் பின்பற்றினால், சபையில் வல்லமையான ஒருங்கிணைப்புச் சக்திகளாக நாம் திகழக்கூடும்.

சபையில் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கு சபைத்தலைவர்களுக்கு நாம் என்னென்ன வழிகளிலெல்லாம் உதவலாம்? சச்சரவுகள் காணப்பட்டாலும், நாம் ஒற்றுமைக்குத்தான் தோள்கொடுக்க வேண்டுமே, தவிர பிரிவினைக்கு அல்ல; அதற்கு நாம் என்ன செய்யலாம்?



# சபை கண்டிப்பு

சபையில் கண்டிப்பைப் பேணுவது சபை அமைப்பின் முக்கிய வேலைகளில் ஒன்றாகும். கண்டிப்புக்கும் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்கிற கேள்வி எழும்பக்கூடும். வேதாகமக் கண்ணோட்டத்தின்படி, சபைக் கண்டிப்பு இரண்டு முக்கிய விஷயங்களில் மையமாக இருக்கிறது; உபதேசத்தின் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வதிலும், சபை செயல்பாட்டின் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வதிலும் சபைக் கண்டிப்பு முக்கியமாக இருக்கிறது.

கடைசி நாட்களில் தேவதுரோகமும் பொய்ப்போதகமும் அதிகம் காணப்படும்; எனவே, வேதாகமப் போதனையின் பரிசுத்தத்தைப் பாதுகாக்குமாறு புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது. அதேபோல, வேசித்தனம், ஏமாற்று, இழிநடத்தை போன்றவையால் சபையின் மரியாதை கெடாமல் பாதுகாப்பதும் முக்கியம். இதற்காகத்தான் வேதவாக்கியங்கள் 'உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை' என்று 2தீமோ 3:16 சொல்கிறது.

**கேள்வி: சபை கண்டிப்பிலும், தவறுசெய்தவர்களை அணுகுவதிலும் கடைப்பிடிக்கவேண்டிய என்ன நியதிகளை சபைக்கு இயேசு கொடுக்கிறார்? மத் 16:19; 18:15-20.**

பக்தியோடும் நீதியோடும் வாழும்போது, ஒருவர்மேல் ஒருவர் பொறுப்புள்ளவர்களாக வாழ்கிறோம் என்று வேதாகமம் சொல்கிறது. சபையின் பரிசுத்தத்தன்மையும், உலகத்திலிருந்து அது வேறுபட்டிருப்பதும்தான் சபையின் தனித்துவ அடையாளம் ஆகும். ஒழுங்கீனமான நடத்தைகளுக்கு எதிராக சபை உறுதியுடன் செயல்படவேண்டிய இக்கட்டான சூழ்நிலைகள் பல எழுந்திருக்கின்றன. எனவே, சபையில் ஒழுக்கத் தரநிலைகள் இருப்பது அவசியம்.

**கேள்வி: சபையில் வரும் சிக்கலான பிரச்சனைகளைக் கையாளும்போது, கடைப்பிடிக்க வேண்டிய என்ன நியதிகளை மத் 7:1-5; கலா 6:1,2 வலியுறுத்துகின்றன?**

---

சபைக் கண்டிப்பு அவசியமென வேதாகமம் வலியுறுத்துகிறது. அது இல்லாமல் எவ்வாறு மற்றவர்களிடம் உண்மையுள்ளவர்களாக இருக்கமுடியும். இந்த அறிவுரைகள் பெரும்பாலும் சீர்பொருந்தலைத்தான் முக்கியப்படுத்துகின்றன. மற்றவர்களைச் சீர்பொருந்தச் செய்கிற நோக்கம்தான் சபைக் கண்டிப்பில் காணப்படவேண்டும். ஆனால், 'நாம் எல்லாருமே பாவிகள், நம் எல்லாருக்குமே கிருபை அவசியம்' என்பதையும் மறந்துவிடக்கூடாது. எனவே, சபைக்கண்டிப்பின்படி நடவடிக்கை எடுக்கும்போது, நம்மிடமும் தவறுகள் உள்ளன என்கிற உணர்வோடும் தாழ்மையோடும் செயல்படவேண்டும்.

தவறுசெய்தவர்களைக் கையாளும்போது, அவர்களைத் தண்டிக்கும் மனப்பான்மையோடு அல்ல, சீர்பொருந்துகிற மனப்பான்மையோடு நடப்பதற்கு நாம் என்ன செய்யலாம்?



# ஊழியப்பணிசெய்வதற்கே அமைப்பு

வெளி ஊழியத்தைச் செய்வதற்கே ஓர் அமைப்பாக இணைக்கப் பட்டுள்ளோம். நம் நம்பிக்கையை உறுதிப்படுத்திக்கொள்கிற ஒரு சமுதாயச் சங்கம் அல்ல இந்த அமைப்பு. நம் நம்பிக்கையை உறுதிப் படுத்துவதும் முக்கியம்தான். ஆனால், நாம் நேசிக்கிற சத்தியத்தை உலகிற்கு அறிவிப்பதுதான் சபையின் முதல் வேலை.

**கேள்வி: மத் 28:18-20இல், ஊழியப்பணிகுறித்த இறுதி அறிவுரைகளை இயேசு தம் சீடர்களுக்கு வழங்கினார். இயேசுவின் கட்டளையிலுள்ள முக்கிய வார்த்தைகளைக் கண்டுபிடியுங்கள். இன்று நம் சபைக்கு இவ்வார்த்தைகள் எவ்வாறு பொருந்தும்?**

இயேசு தம் சீடர்களுக்குக் கட்டளையிட்ட மாபெரும் ஊழியக் கட்டளையில் நான்கு வினைச்சொற்கள் உள்ளன: புறப்பட்டுப்போங் கள், சீடர்களாக்குங்கள், ஞானஸ்நானம்கொடுங்கள், உபதேசம்பண் ணுங்கள். கிரேக்க இலக்கண முறைப்படி, சீடர்களாக்குங்கள் என்பது தான் முக்கிய வினைச்சொல்; மற்ற மூன்று வினைச்சொற்களும் எவ் வாறு சீடர்களாக்கலாம் என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. விசுவாசி கள் உலகமெங்கும் புறப்பட்டுச் சென்று, நற்செய்தியைப் பிரசங்கித்து, மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, இயேசு சொன்னவற்றைக் கைக் கொள்ளும்படி உபதேசம்பண்ணும்போது சீடர்கள் உருவாகிறார்கள்.

இந்த ஊழியக்கட்டளைபடி சபை செய்யும்போது, தேவராஜ்யம் விரிவடைகிறது; உலகமெங்கிலும் ஏராளமானோர் இயேசுவை இரட்சக ராக ஏற்றுக்கொள்கிறார்கள்; புதிய உலகளாவிய குடும்பம் ஒன்று உருவாகிறது. புதிய சீடர்கள் இன்னும் பல புதிய சீடர்களை உருவாக்கு கிறார்கள். 'நான் உங்களோடு இருக்கிறேன்' என்கிற இயேசுவின் வாக்குறுதி அவர்களுக்கும் சொந்தமே. மத்தேயு புத்தகத்தின் துவக்கத் தில், 'தேவன் நம்மோடு இருக்கிறார்' என்று 1:23இல் வருகிறது. முடிவிலும், இதே வாக்குறுதி 28:20 இல் வருகிறது.

சீடர்களின் வேலை எளிதானதென்று இயேசு அவர்களிடம் சொன் னதே இல்லை. தாம் அவர்களோடு இருப்பதாக உறுதியளித்தார்; விசு வாசத்தோடு புறப்பட்டுச் சென்றால், சர்வவல்லவரின் பாதுகாப்பு அவர்களுக்கு இருக்கும். திடன்கொண்டு, தைரியமாக இருக்கும்படி கட்டளையிட்டார்; ஏனெனில், தூதர்களையும்விட பராக்கிரமசாலி ஒருவர் அவர்கள் பக்கத்தில் இருக்கிறார்; அவர் இயேசு. அவர் பர லோகச் சேனைகளின் தளபதி. அவர்களுடைய ஊழியத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்; அந்த ஊழியம் வெற்றி பெறுவதற்கான பொறுப்பை அவர் ஏற்றிருக்கிறார். அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவரோடு சேர்ந்து ஊழியம்செய்கிற வரையிலும் அவர்களுக்குத் தோல்வி இல்லை.

இரண்டாம் வருகைமட்டும் நம்மோடு இருப்பதாக இயேசு வாக்களித்திருக்கிறார். இயேசு கொடுத்திருக்கும் ஊழியக்கட்டளையை நிறைவேற்றும்படி நாம் பிரயாசப்படும்போது, இந்த வாக்குறுதியின் நிஜம் நம்மில் எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்க வேண்டும்?

**வெள்ளி** டிசம்பர் 21



## மேலும் படிக்க:

'நல்ல தலைமைத்துவத்திற்கான நியதிகள் நம் சமுதாய அமைப்பு ஒவ்வொன்றுக்கும் பொருந்தும். சபைக்கும் பொருந்தும். ஆனாலும், சபைத்தலைவர் வெறும் தலைவராகமட்டும் இருக்கக்கூடாது. அவர் ஒரு வேலைக்காரனாகவும் இருக்க வேண்டும்.

'தலைவனாக இருப்பதற்கும், வேலைக்காரனாக இருப்பதற்கும் ஒரு முக்கிய வித்தியாசம் உள்ளது. ஒருவர் எவ்வாறு ஒரே சமயத்தில் தலைவனாகவும், சேவகனாகவும் வேலைசெய்யமுடியும்? தலைவர் பதவி கனத்திற்குரியதல்லவா? தான் கட்டளையிட மற்றவர்கள் அதற்குக் கீழ்ப்படியவேண்டும் என்று அவர் எதிர்பார்க்க மாட்டாரா? அப்படியானால், சொல்லப்படுகிற வேலையைச் செய்கிற ஒரு வேலைக்காரன் என்கிற கீழான அந்தஸ்திற்கு அவர் எவ்வாறு வரமுடியும்?

'இந்தப் புதிருக்கு விடைகாண இயேசுவைப் பார்க்கவேண்டும். அவர் வேலையாள் தலைமைத்துவ நியதியைக் கச்சிதமாக எடுத்துக்காட்டினார். அவருடைய ஒட்டுமொத்த வாழ்க்கையுமே சேவைதான். அதேசமயம், உலகம் கண்டிராத மிகப்பெரிய தலைவராகவும் இருந்தார்.' – ஜி. ஆர்தர் கியோ.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *ஒரு தலைவன் எவ்வாறு வேலைக்காரனாகவும் இருக்கலாம் என்பதுபற்றி தியானியுங்கள். 'தேவனைத் தொழுகொள்கிறேன்' என்று சொல்லாதிருந்தும், இதற்கு எடுத்துக்காட்டாக வாழ்கிற ஒரு சிலர்பற்றிச் சொல்லுங்கள்.*

2 *மத் 20:25-28 வரை மீண்டும் வாசியுங்கள். 'பெரியவன்' என்பதற்கு இந்த உலகம் சொல்கிற அர்த்தம் என்ன, தேவன் சொல்கிற அர்த்தம் என்ன? மத் 20:26.*

3 *சபைத்தலைவர்களுடைய வேலைகளில் ஒன்று சபையின் ஒற்றுமையைப் பாதுகாப்பது. ஆனாலும், சபைத்தலைவர்கள் தங்கள் மனித இயல்பின் நிமித்தம், நல்ல முன்மாதிரிகளாகத் திகழமுடியாதபடி தவறுசெய்துவிட்டால், நாம் என்ன செய்யலாம்?*

4 *தவறுசெய்பவர்கள்மீது சபை கண்டிப்பின்படி நடவடிக்கை எடுக்கும்போது, அவர்கள்மேல் இரக்கமாகவும் அன்பாகவும் நடந்துகொள்ளவேண்டியது ஏன் மிகமுக்கியம்? இத்தகைய சூழ்நிலைகளில் மத்தேயு 7:12 ஏன் எப்போதும் நம் மனதில் இருக்கவேண்டும்?*

**பாடச்சுருக்கம்: சபையின் ஊழியப்பணிக்கும், விசுவாசிகளின் ஒற்றுமைக்கும் நல்லதொரு சபை அமைப்பு இன்றியமையாததாகும். கிறிஸ்துவே சபையின் தலைவராக இருக்கிறார்; மக்களை தேவனிடம் வழிநடத்துகிற சபைத்தலைவர்கள் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும். தேவ வார்த்தையை உண்மையோடு போதிப்பதினாலும், அந்த வார்த்தைக்கும் உண்மையுள்ளவர்களாக வாழ்வதினாலும் ஒற்றுமை பாதுகாக்கப்படுகிறது.**

# என் மனைவி ஆலயத்திற்கு வருவதில்லை

**டேனியல் கேற்றன்**

என் மனைவி அட்வென்டிஸ்ட் சபைக்குச் செல்வதை நிறுத்தியிருந்தாள்; ஆனால், நான் நம்பிக்கை இழக்கவில்லை; அதற்குக் காரணம் இதுதான்.

ருமேனியாதான் என் தாய்நாடு. அங்குக் கம்யூனிஸ்ட் ஆட்சிக்காலத்தில் ஒரு பெண் மணி அட்வென்டிஸ்ட் சபைபற்றி அறிந்து, ஓய்வுநாள் ஆராதனைகளில் கலந்துகொள்ள ஆரம்பித்தாள். அதனால் அவளுடைய கணவன் மிகவும் கோபமடைந்தான்.

“ஒவ்வொரு சனிக்கிழமையிலும் இதே நேரத்திற்கு எங்கே செல்கிறாய்?”

“அட்வென்டிஸ்ட் சபைக்குச் செல்கிறேன்” செல்லமாகப் பதிலளித்தாள் மனைவி.

“அது எனக்குத் தெரியும். ஆலயத்திற்குச் செல்; ஆனால், ஞானஸ்நானம் எடுக்கக்கூடாது. ஞானஸ்நானம் எடுத்தால் கொன்றுவிடுவேன்” என்றான்.

வேதாகமத்தை வாசித்து, இயேசுவைப்பற்றி அறிந்துகொண்டபோது, ஞானஸ்நானம் எடுக்கவேண்டியதின் அவசியத்தைப் புரிந்துகொண்டாள்.

ஞானஸ்நானம் பெற்றதும், சபைமக்கள் சூழ்ந்து நின்றுகொண்டார்கள். கட்டிப்பிடித்து, மலர் கொடுத்து, வாழ்த்தினார்கள். ஆனால் அந்தப் பெண்ணுக்குமட்டும் கலக்கமாக இருந்தது; தன் கணவனுக்குத் தெரிந்தால் என்னவாகும்?

கைகளில் பூக்களோடு வீட்டிற்கு வருகிறாள்; கணவன் வீட்டின் முற்றத்தில் ஒரு மேசையின்முன் உட்கார்ந்திருக்கிறான்; மேசையின்மேல் பளபளப்பான கத்தி.

“எங்கிருந்து இந்தப் பூக்கள் கிடைத்தன?”

“ஞானஸ்நானம் எடுத்துவிட்டேன்.”

விர்ரென்று கோபம் ஏறியது. “ஞானஸ்நானம் எடுத்தால் கொல்வேனென்று சொன்னேன் அல்லவா என்று சொல்லியவாறு கத்தியை எடுத்தான்; மனைவியைக் கொல்வதற்காக விரட்டினான். சாவதற்குமுன் கடைசியாக ஒருமுறை ஜெபிக்க அனுமதிக்கும்படி மனைவி கேட்டாள். சம்மதித்தான். மனைவி முழங் காலிட்டு ஜெபித்தாள்.

திடீரென அவன் கையிலிருந்து கத்தி கீழே விழுந்தது. முகம் வெளிறியது. உடல் நடுங்கியது. கீழே விழுந்தான். உடனே, மனைவி எழுந்து அவனைத் தூக்கிவிட்டாள். இருவரும் வீட்டிற்குள் சென்றார்கள். விரைவில், கணவனும் ஞானஸ்நானம் பெற்றான்.



இந்த மனிதனுடைய இருதயத்தை தேவன் மாற்ற முடியுமென்றால், என் மனைவினுடைய இருதயத்தை யும் தேவனால் தொடமுடியும்.

**எங்குமே நம்பிக்கை இல்லாமல் தெரிந்தாலும்,**
**தேவனை நாம் நம்பலாம்.**